**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8073044

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : நாமக்கல் PS காவல்நிலையம்: ஊ.த.க.ப. நாமக் Year ஆண்டு: 2019 FIR No. மு.த.அ. எண்: 03/AC/2019 Date நாள்: 12.02.2019

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as amended Sections பிரிவுகள்: 7 and 7A
(ii) Act சட்டம்: by the Prevention of Corruption Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018, r/w Cr.P.C Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 11-02-2019 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.45 மணிக்கு முன்பு Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12-02-2019 Time நேரம் : 15.00 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-I 12-02-2019 Time நேரம் : 15.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய்மொழியாக~~ திடீர் தணிக்கையின் போது கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 40 கி.மீ வடகிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், முத்துக்காளிப்பட்டி, இராசிபுரம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A.T. ஜெயக்குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அ. தியாகராஜன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.06.1973 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91-ன் மூலம் அனுப்பப்பட்டுள்ளது

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது

விவரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Smt. NALLAMMAL Rank INSPECTOR to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுத்தல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.02.2019, 18.00 மணிக்கு

Name: பெயர் A.T. ஜெயக்கொடி
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் இணை கண்காணிப்பாளர்,
உ.நு.க. பிரிவு, நாமக்கல்.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.02/AC/2019. u/s. 7 and 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018, r/w 102 Cr.P.C., வழக்கின் வரிசை எண். 7 இன் தொடர்ச்சி**

எதிரிகளின் பட்டியல்

1) திரு.T.சண்முக ஆனந்த், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

2) செல்வி.T.சக்தி, A1 இருக்கை இளநிலை உதவியாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

3) திரு.P.ரவி (வயது-37), த/பெ. பச்சமுத்து, கதவு எண்.31-A குமாரசாமி தெரு, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

4) திரு.P.சுரேஷ் (வயது-39), த/பெ. பெரியசாமி, கதவு எண்.4/100, புதுபாளையம், காந்தி ஆசிரமம் அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

5) திரு.P.கருணாகரன் (வயது-46), த/பெ. பரமசிவம், கதவு எண்.43/1, கோனேரிபட்டி, இராசிபுரம் தாலூக்கா, நாமக்கல் மாவட்டம்.

6) திரு.K.குப்புசாமி (வயது-41), த/பெ.கருப்பண்ணன், கதவு எண்.37சி, குமாரசாமி தெரு, இராசிபுரம் டவுன், நாமக்கல் மாவட்டம்.

7) திரு.K.முத்துசாமி (வயது-44), த/பெ. காளிமுத்து, கதவு எண்.1/77, ஆதி திராவிடர் தெரு, பட்டணம் முனியப்பம்பாளையம், இராசிபுரம் தாலூக்கா, நாமக்கல் மாவட்டம்.

8) திரு.A.குப்புராஜ் (வயது-35), த/பெ. ஆறுமுகம், கதவு எண்.5/53A, மாதாகோவில் தெரு, ஆர் புதுப்பாளையம், இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்

9) திரு.P.செந்தில்குமார் (வயது-34), த/பெ. பழனிவேல், கதவு எண்.3A, குப்புதெரு, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

10) திரு.J.சாகுல்ஹமீது (வயது-30), த/பெ.ஜான்பாஷா, கதவு எண்.2/48, சக்தி நகர், ஆண்டகலூர்கேட், இராசிபுரம் தாலூக்கா, நாமக்கல் மாவட்டம்.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.02/AC/2019, u/s. 7 and 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018, r/w 102 Cr.P.C., வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:**

- - -

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 11.02.2019-ஆம் தேதி திங்கட்கிழமை மதியம் 12.45 மணி முதல் 23.00 மணி வரையில் நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், முத்துக்காளிப்பட்டி To இராசிபுரம் டவுன் செல்லும் சாலையில் இயங்கிவரும் இராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 12.02.2019-ஆம் தேதி மாலை 15.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 02/AC/2019, u/s. 7 and 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018, r/w 102 Cr.P.C.,-இன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், முத்துக்காளிப்பட்டி To இராசிபுரம் டவுன் செல்லும் சாலையில் இயங்கிவரும் இராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் பணிபுரியும் மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் அலுவலர்கள், புதிய வாகனப்பதிவு, பழகுநர் உரிமம் அளித்தல், ஓட்டுநர் உரிமம் அளித்தல், வாகன உரிமையாளர் பெயர் மாற்றம், வாகனத்தின் பதிவு முகவரி மாற்றம், வாகன ஆண்டு புதுப்பித்தல் சான்று வழங்குதல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள் மூலமாகவும், அலுவல் நேரத்தில் 11.02.2019-ம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் அன்று காலை 11.45 மணிக்கு காவல் துணைக் கண்காணிப்பாளர், அரசு சாட்சிகள் திருமதி.K.கீதா, துணை வட்டாட்சியர், இராசிபுரம் வட்டம் மற்றும் திரு.B.மகபூப் அகமத், வருவாய் ஆய்வாளர், வெண்ணந்தூர் பிர்க்கா, இராசிபுரம் வட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் அரசு வாகனத்தில் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு இராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்திற்கு மதியம் 12.30 மணிக்கு சென்று சேர்ந்தேன். மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ள மோட்டார்

வாகன ஆய்வாளர் நிலை-1 அறை மற்றும் பணியாளர்கள் அறைகளில் உள்ள அலுவலர்கள் யாரும் வெளியே செல்லா வண்ணம் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. அலுவலகத்தின் ஹாலில் உள்ள டேபிளின் முன்பு காக்கி நிறபேண்டும், வெள்ளை நிற சட்டையும் அணிந்து அமர்ந்திருந்த மோட்டார் வாகன ஆய்வாளரிடம் என்னையும், என்னுடன் வந்திருந்த அரசு சாட்சிகளையும் மற்றும் காவலர்களையும் அவரவர்களின் அடையாள அட்டைகளை காட்டி அறிமுகம் செய்து கொண்டேன். பின்பு நான் அவரைப்பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் T.சண்முக ஆனந்த் என்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அவர்களிடம் நான் குழுவினருடன் அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொண்டேன். சந்தேகத்தின் அடிப்படையில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவருடைய இருக்கையின் முன் உள்ள மரத்திலான டேபிளின் இடது பக்கம் உள்ள டிராயரில் வைக்கப்பட்டிருந்த வாகன எண் பதிவேட்டில் காக்கி நிற கவரில் மடிப்புடன் பணம் இருந்தது. அதை சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் மொத்தம் ரூ.10,000/- (ரூ.2000 x 5) இருந்தது. மேற்படி தொகை ரூ.10,000/- பற்றி திரு.சண்முக ஆனந்த்திடம் கேட்டபோது, அந்த பணம் எப்படி அங்கு வந்தது என்று தனக்கு தெரியவில்லை என்று தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் குற்றம் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகத்திற்கு இடமளிக்கும் விதம் இருந்ததாலும் அந்த பணம் ரூ.10,000/-ஐ நான் விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். அந்த அறையினுள் இருந்த P.ரவி என்பவர் இராசிபுரம் பழைய பஸ்ஸ்டேண்ட் அருகில் உள்ள வேல்முருகன் ஆட்டோ கன்சல்டிங் கம்பெனியில் மோட்டார் வாகன ஏஜென்ட்டாக வேலை செய்து வருவதாகவும், அவர்கள் கொடுக்கும் வாகனங்கள் சம்மந்தமான வேலைகளையும், இராசிபுரம் பகுதி வாகன உரிமையாளர்கள் கொடுக்கும் வேலைகளையும் இராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் வந்து செய்து கொடுத்து வருவதாகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சண்முக ஆனந்த் சொல்லும் வேலைகளை செய்து கொடுப்பேன் என்றும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ததில், அவர் தனது சட்டையின்

இடதுமேல்பாக்கெட்டிலிருந்து கத்தையாக ஒரு சிறிய வெளிர்நீலக் கலர் துண்டுச்சீட்டுடன் மடித்து வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை சாட்சிகள் உதவியுடன் பெற்று எண்ணிப்பார்க்கையில் மொத்தம் ரூ.39,770/- (Rs.2000x7, Rs.500x40, Rs.200x8, Rs.100x41, Rs.10x7) இருந்தது. அந்த பணம் பற்றி கேட்க தான் இன்று சில வாகனங்களுக்கு ரோடு டேக்ஸ் கட்ட கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் குற்றம் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகத்திற்கு இடமளிக்கும் விதம் இருந்ததாலும் அந்தப்பணம் ரூ.39,770/- விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி வெளிர்நீலக் கலர் துண்டுச்சீட்டு பார்வையிடப்பட்டது, அதில் 04/02/19 To 08/02/19 என்று தேதியிட்டு, Ravi என்ற பெயரில் MVI கணக்கு என்று எழுதப்பட்டு தொகைகள் பட்டியலிட்டு குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி துண்டுச்சீட்டை பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளரை அழைத்துக்கொண்டு பணியாளர் அலுவலக அறைக்கு வரப்பட்டது. அங்கு A1 இருக்கை இளநிலை உதவியாளர் செல்வி.T.சக்தி என்பவர் இருந்தார். அந்த அறை முழுவதும் சோதனை செய்யப்பட்டது. அவ்வறையின் தென்மேற்கு மூலையில் உள்ள பணம் வசூலிக்கும் இடத்தின் அருகில் உள்ள A2 இருக்கை அருகில் TN52 E 8544 R.Balaji என்ற பெயர் உள்ள RC புத்தகத்தின் உள்ளே கத்தையாக பணம் இருந்தது. அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் ரூ.22,050/- (Rs.2000x10, 200x1, 100x16, 50x5) இருந்தது. அதுபற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்க, பணம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், A2 இருக்கை இளநிலை உதவியாளர் திரு.K.சேகர் என்பவர் தர்மபுரி கோர்ட் அலுவலாக இன்று சென்றுள்ளார் என்றும், A1 இருக்கை இளநிலை உதவியாளர் செல்வி.சக்தி என்பவர் இன்று A2 இருக்கை பொறுப்புகளை கவனித்து வந்தார் என்றும் சொன்னார். மேற்படி பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் மேற்படி பணம் ரூ.22,050/-ஐ விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளரை அழைத்துக் கொண்டு மக்கள் தொடர்பு அலுவலர் அறைக்கு வரப்பட்டது. அந்த அறையில் இருந்த

P.சுரேஷ் என்பவரை விசாரிக்க, தான் New Life Placement Service Limited, Trichy என்ற நிறுவனத்தின் Man Power Agency மூலம் கடந்த 02.02.2018 முதல் 31.12.2018 வரை கம்ப்யூட்டர் புரோகிராமராக மாதம் ரூ.6,000/- தொகுப்பு ஊதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்ததாகவும், ஒப்பந்தம் முடிந்தவுடன் தான் அவ்வப்போது அலுவலகம் வந்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சண்முக ஆனந்த் சொல்லும் அலுவலக வேலைகளை செய்து கொடுப்பதாகவும், அதற்கு திரு.சண்முக ஆனந்த் பணம் கொடுப்பார் என்றும் சொன்னார். பின்னர் அவரை சோதனையிட, அவருடைய பேண்டின் வலது பின்புற பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்ததை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்க அதில் ரூ.1,960/- (Rs.500x3, 100x4, 50x1, 10x1) இருந்தது. அந்த பணம் பற்றி கேட்க, அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் குற்றம் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகத்திற்கு இடமளிக்கும் விதம் இருந்ததாலும் அந்தப்பணம் ரூ.1,960/-ஐ நான் விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அலுவலக ஹாலில் நின்று கொண்டிருந்த P.மோகன பிரியா என்பவரை விசாரிக்க, அவர் கடந்த 06.02.2019-ஆம் தேதி முதல் இராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் அலுவலர்களுக்கு உதவியாக கம்ப்யூட்டர் வேலை செய்து வருகிறேன் என்றும் சொன்னார். நான், அரசு சாட்சிகள், மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு அலுவலக ஹாலுக்கு சென்று அந்த ஹால் முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டின் அடியில் UPS பேட்டரிகள் வைத்திருக்கும் இடத்தில் கத்தையாக பணம் கேட்பாரற்று கிடந்தது. அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் ரூ.17,950/- (Rs.2000x4, Rs.500x15, Rs.200x12, Rs.50x1) இருந்தது. அந்தப் பணம் பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்க, அது பற்றி தனக்கு தெரியாது என்று கூறினார். அந்த பணம் பற்றி அங்கிருந்த மற்றவர்களிடம் கேட்கப்பட்டது. அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் பணம் ரூ.17,950/- விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். அலுவலக ஹாலில் அமர்ந்திருந்தவர்களில் P.கருணாகரன் என்பவரை விசாரிக்க, அவர் இராசிபுரத்தில் அம்மன் டிரைவிங் ஸ்கூல் என்ற பெயரில் டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருவதாகவும், அவ்வப்போது இராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்

வந்து அலுவலர்களை சந்தித்து டிரைவிங் லைசென்ஸ் சம்மந்தமான வேலைகளை செய்து வருகிறேன் என்று சொன்னார். இன்று என்ன வேலையாக இங்கு வந்தீர்கள் என்று கேட்க, அவர் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தார். பின்னர் அவரை சோதனையிட, அவர் தனது பேண்ட்டின் வலது பக்க முன்பாக்கெட்டில் கத்தையாக மடித்து வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் ரூ.17,075/- (Rs.2000x3, Rs.500x17, Rs.200x1 Rs.100x23, Rs.20x1, Rs.10x5, Rs.5x1) இருந்தது. அந்த பணம் பற்றி கேட்க, அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் குற்றம் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகத்திற்கு இடமளிக்கும் விதம் இருந்ததாலும் அந்தப்பணம் ரூ.17,075/-ஐ நான் விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் K.குப்புசாமி என்பவரை விசாரிக்க அவர் இராசிபுரத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி, பஸ் கம்பெனிகள், லாரி கம்பெனிகளுக்கு மோட்டார் வாகன அலுவலகம் சம்மந்தமான வேலைகளை செய்து கொடுக்கும் தனியார் ஏஜெண்ட் வேலை செய்து வருகிறேன் என்றும், அரசிடமிருந்து பர்மிட் எதுவும் பெறவில்லை என்றும், எனக்கு அலுவலகம் எதுவும் இல்லை என்றும், மேற்படி வாகன வேலைகளுக்கான பீஸ் தொகைகளை வாகன உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வேன் என்றும் சொன்னார். அவரை சோதனையிட்ட போது, அவர் அவரது பேண்ட்டின் வலது பக்க முன்பாக்கெட்டில் கத்தையாக மடித்து வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் ரூ.16,610/- (Rs.2000x4, Rs.500x13, Rs.100x17 Rs.50x5, Rs.20x1, Rs.10x14) இருந்தது. அந்த பணம் பற்றி கேட்க, அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் குற்றம் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகத்திற்கு இடமளிக்கும் விதம் இருந்ததாலும் அந்தப்பணம் ரூ.16,610/-ஐ விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த வெள்ளைநிற துண்டுச்சீட்டு பார்வையிடப்பட்டது, அதில் 31.12.18 Tax என்று தேதியிட்டு குறிப்பிட்டும், வாகனங்கள் சம்மந்தமான வேலைகளையும், அதற்கு எதிரே தொகைகளையும் குறிப்பிட்டு பட்டியலிட்டு குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி துண்டுச்சீட்டை பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து, விசாரணைக்காக நான்

செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் K.முத்துசாமி என்பவரை விசாரிக்க, அவர் இராசிபுரத்தில் உள்ள மணி டிரைவிங் ஸ்கூலில் மாதம் ரூ.6,000/- சம்பளத்தில் வேலை செய்து வருவதாகவும், அவ்வப்போது இராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் வந்து அலுவலர்களை சந்தித்து வாகனங்கள், டிரைவிங் லைசென்ஸ் சம்மந்தமான வேலைகளை செய்து வருவேன் என்று கூறினார். அவரை சோதனையிட, அவரது சட்டையின் இடதுபுற மேல்வெளிப்பாக்கெட்டில் 2 கத்தையாக மடித்து வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் ரூ.21,000/- (Rs.500x30, Rs.2,000x3) இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க, அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் குற்றம் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகத்திற்கு இடமளிக்கும் விதம் இருந்ததாலும் அந்தப்பணம் ரூ.21,000/- விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பின்னர் அவர் கையில் வைத்திருந்த கருப்புநிற Bag-ல் வைத்திருந்த கோப்புகள் பார்வையிடப்பட்டது. அதில் வரிசை எண் 1) TN 28 BY 3810 Tata Mini Auto வாகனத்தின் அசல் பதிவுச்சான்று மற்றும் இணைப்புகள், 2) TN 28 AS 9811 வாகனத்தின் அசல் பதிவுச்சான்று மற்றும் இணைப்புகள், 3) திரு.AS.விஜயன் என்பவர் பெயரிலான டிரைவிங் லைசென்ஸ் ரெனிவல் அப்ளிகேசன் மற்றும் இணைப்புகள், 4) திரு.P.தங்கராஜ் என்பவர் பெயரிலான டிரைவிங் லைசென்ஸ் ரெனிவல் மற்றும் டூப்ளிகேட் லைசென்ஸ் அப்ளிகேசன் மற்றும் இணைப்புகள், 5) திரு.P.தங்கராஜ் என்பவர் பெயரிலான வாகன ஓட்டுனர் உரிமம் எண் TN28Z20040001397 காணாமல் போனது சம்மந்தமாக நகல் உரிமம் வேண்டுதல் தொடர்பாக மோட்டார் வாகன ஆய்வாளர், இராசிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலர் நாமக்கல் (வடக்கு) அவர்களுக்கு அனுப்ப வேண்டிய கடிதம் ஆகியவைகள் இருந்தன. இது தொடர்பாக திரு.முத்துசாமியிடம் விசாரிக்க அந்த அசல் பதிவுச்சான்று மற்றும் விண்ணப்பங்கள் என்றும், இன்று அவைகள் சம்மந்தமான வேலைகளை முடித்துக் கொடுக்க தான் பூர்த்தி செய்து கொண்டு வந்ததாக தெரிவித்தார். மேற்படி வரிசை எண் 5)திரு.P.தங்கராஜ் என்பவர் பெயரிலான வாகன ஓட்டுனர் உரிமம் எண்.TN28Z20040001397 காணாமல் போனது சம்மந்தமாக நகல் உரிமம் வேண்டுதல் தொடர்பான கடிதத்தை பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம்

செய்து விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் A.குப்புராஜ் என்பவரை விசாரிக்க, அவரது சொந்த ஊர் புதுப்பாளையம் என்றும், அவர் இராசிபுரத்தில் உள்ள சத்தி டிரைவிங் ஸ்கூலில் மதியழகன் என்பவருடன் பார்ட்னராக இருந்து நடத்தி வருவதாகவும், தான் அவ்வப்போது இராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் வந்து அலுவலர்களை சந்தித்து வேலைகளை செய்து வருவேன் என்று கூறினார். அவரை சோதனையிட, அவர் அவரது சட்டையின் மேல்வெளிப்பாக்கெட்டில் கத்தையாக மடித்து வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் ரூ.19,000/- (Rs.2000x9, Rs.500x2) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க, அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் குற்றம் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகத்திற்கு இடமளிக்கும் விதம் இருந்ததாலும் அந்தப்பணம் ரூ.19,000/- விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. அவர் கையில் வைத்திருந்த கோப்புகள் பார்வையிட்டதில் TN 67 A 1456 Ashok Leyland என்ற வாகனத்தின் அசல் பதிவுச்சான்று மற்றும் இணைப்புகள், TN 55 AZ 2561 Maruthi Suzuki Car வாகனத்தின் அசல் பதிவுச்சான்று மற்றும் இணைப்புகள், திரு.மோகன்குமார், த.பெ.கே.கணபதி, காட்டுக்கொட்டாய், இராசிபுரம் என்பவரின் முகவரி மாற்றம் தொடர்பான மனு மற்றும் இணைப்புகள் ஆகியவைகள் இருந்தன. திரு.குப்புராஜிடம் விசாரிக்க மேற்படி பதிவுச்சான்றுகள் மற்றும் முகவரி மாற்றம் சம்மந்தமான வேலைகளை முடித்துக் கொடுக்க கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த வெளிர்நீலக் கலர் துண்டுச்சீட்டு பார்வையிடப்பட்டதில் 04/02/19 To 08/02/19 என்று தேதியிட்டு, Kuppan என்ற பெயரில் MVI கணக்கு என்று எழுதப்பட்டு வாகனங்கள் சம்மந்தமான விபரங்கள் எழுதப்பட்டு அதற்கு நேராக தொகைகள் பட்டியலிட்டு முன் மற்றும் பின் பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி துண்டுச்சீட்டை பார்வையிட்டதற்கு அடையாளமாக அதன் பின்புறத்தில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும் ஒருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் P.செந்தில்குமார் என்றும், சொந்த ஊர் இராசிபுரம் டவுன் என்றும், தான் இராசிபுரத்தில் உள்ள சத்தி டிரைவிங் ஸ்கூலில் பயிற்சியாளராக உள்ளதாக சொன்னார். நான் அவ்வப்போது இராசிபுரம் மோட்டார்

வாகன ஆய்வாளர் அலுவலகம் வந்து அலுவலர்களை சந்தித்து அலுவலக வேலைகளை செய்து வருகிறேன் என்று கூறினார். அவரை சோதனையிட, அவரது சட்டையின் மேல்வெளிப்பாக்கெட்டில் கத்தையாக மடித்து வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் ரூ.10,300/- (Rs.2,000x2, Rs.500x8, Rs.200x11, Rs.50x2) இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க, அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் குற்றம் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகத்திற்கு இடமளிக்கும் விதம் இருந்ததாலும் அந்தப்பணம் ரூ.10,300/- என்னால் விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. அவர் கையில் வைத்திருந்த கோப்புகள் பார்வையிடப்பட்டது. அதில் TN 37 AT 6305 Ashok Leyland என்ற வாகனத்தின் அசல் பதிவுச்சான்று மற்றும் இணைப்புகள், TN 28 AX 9822 Eicher Tipper வாகனத்தின் அசல் பதிவுச்சான்று மற்றும் இணைப்புகள், TN 24 A 7308 Tata ACE வாகனத்தின் அசல் பதிவுச்சான்று மற்றும் இணைப்புகள் ஆகியவைகள் இருந்தது தொடர்பாக செந்தில்குமாரிடம் விசாரிக்க அந்த அசல் பதிவுச்சான்றுகள் சம்மந்தமான வேலைகளை இன்று முடித்துக் கொடுக்க கொண்டு வந்ததாக தெரிவித்தார். மேலும் ஒருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் J.சாகுல் அமீது என்றும், சொந்த ஊர் ஆண்டகளூர் கேட் என்றும், தான் இராசிபுரத்தில் உள்ள சத்தி டிரைவிங் ஸ்கூலில் பார்ட்னராக உள்ளதாக சொன்னார். நான் அவ்வப்போது இராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் வந்து வாகன உரிமையாளர்களுக்கு ஏஜென்ட்டாக இருந்து அவர்கள் வாகனங்கள் சம்மந்தமான வேலைகளை செய்து கொடுத்து வருகிறேன் என்று சொன்னார். அவரை சோதனையிட, அவரது பேண்டின் இடதுபுற வெளிப்பாக்கெட்டில் கத்தையாக மடித்து வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் ரூ.17,000/- (Rs.2,000x1, Rs.500x29, Rs.200x2, Rs.100x1) இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க, அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் குற்றம் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகத்திற்கு இடமளிக்கும் விதம் இருந்ததாலும் அந்தப்பணம் ரூ.17,000/-ஐ விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. அவர் வலது கையில் வைத்திருந்த கட்டைப்பையில் இருந்த கோப்புகள் பார்வையிடப்பட்டதில் TN 45

AF 6223 Maruthi Omni என்ற வாகனத்தின் அசல் பதிவுச்சான்று மற்றும் இணைப்புகள், TN 32 AY 0362 TATA ACE வாகனத்தின் அசல் பதிவுச்சான்று மற்றும் இணைப்புகள் மற்றும் TN 24 W 9250 Maruthi Omni வாகனத்தின் அசல் பதிவுச்சான்று மற்றும் இணைப்புகள் ஆகியவைகள் இருந்தன. இதுபற்றி அவரிடம் விசாரிக்க, அந்த பதிவுச்சான்றுகள் சம்மந்தமான வேலைகளை முடித்துக் கொடுக்க கொண்டு வந்ததாக தெரிவித்தார். பின்னர் தரை தளத்திற்கு வந்து மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் வைத்து, திரு.சண்முக ஆனந்த் அவர்களிடம் 2019-ம் ஆண்டிற்குண்டான கொடிநாள் இரசீது பற்றி கேட்க, வட்டார போக்குவரத்து அலுவலகம் நாமக்கல் (வடக்கு) அலுவலக கு.க.எண்.1567/A1/2019, நாள்: 11.01.2019-ல் கண்ட உத்தரவுப்படி ரூ.2,50,000/- என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், அதற்குண்டான ரசீதுகள் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதில் வரிசை எண்கள் 5696001 முதல் 5696100 வரையும், வரிசை எண்கள் 5696101 முதல் 5696156 வரையும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அவற்றிற்கான தொகை ரூ.10,000/-க்கு 01.02.2019-ம் தேதியில் வரைவோலை எடுக்கப்பட்டு நாமக்கல் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பப்படாமல் உள்ளதாகவும், மீதமுள்ள தொகை ரூ.5,600/- தொகை இருப்பில் உள்ளதாகவும் கணக்குப்பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். சிறுசேமிப்பு இலக்கு பற்றி கேட்க, குழந்தைகள் தினம் 2018 மொத்தம் 625 வில்லைகள் வழங்கப்பட்டு, அதில் இதுவரை மொத்தம் 600 வில்லைகள் விநியோகிக்கப்பட்டு, மீதம் 25 வில்லைகள் இருப்பில் உள்ளதாகவும், அதற்குரிய தொகை ரூ.1200/- அதற்குரிய கணக்குப் பதிவேட்டில் பதிவு செய்து இருப்பில் உள்ளதாக தெரிவித்தார். மேற்படி பதிவேட்டை பார்வையிட்டதில் மேற்படி தொகைகள் குறித்த பதிவுகள் சரியாக ஒத்திருந்தன. பின்னர் அலுவலகத்தின் மற்ற பதிவேடுகள் பார்வையிடப்பட்டது. சந்தேகத்தின் பேரில் அனைத்து வாகனங்களுக்கான Registration Certificate Entry Register-2019 (Page-1 to 48) அப்பதிவேட்டை பராமரிக்கும் நபர் பற்றி திரு.சண்முக ஆனந்த் அவர்களிடம் கேட்க, இளநிலை உதவியாளர் செல்வி.T.சக்தி என்பவரும், திரு.K.குப்புசாமி என்ற தனியரை வைத்தும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார். அதேபோல் போக்குவரத்து வாகனங்களுக்கான Fitness Certificate Register-2019 (Page-1 to 49)

பார்வையிடப்பட்டது. அப்பதிவேட்டை பராமரிக்கும் நபர் பற்றி கேட்க, அதில் தானும், திரு.K.குப்புசாமி என்ற தனியரை வைத்தும் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். மேற்படி பதிவேடுகளை பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து மேற்படி இரண்டு அசல் பதிவேடுகளையும் விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன்.

இந்த திடீர் தணிக்கையின்போது அலுவலர்களிடமிருந்தும், அலுவலகத்தின் உள்ளேயும், அலுவலர்களின் இருக்கை பகுதியிலும் மற்றும் தனிநபர்களிடமிருந்தும் மொத்தம் ரூ.1,92,715/- கைப்பற்றப்பட்டது. மேற்படி நிகழ்வுகளுக்கு அரசு சாட்சிகள், மோட்டார் வாகன ஆய்வாளர் முன்னிலையில் என்னால் செயல்முறை நடவடிக்கைகள் 11.02.2019-ஆம் தேதி மதியம் 12.45 மணி முதல் இரவு 23.00 மணி வரை தயார் செய்யப்பட்டது, அதில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து, மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சண்முக ஆனந்த் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. பின்னர் தனியர்கள்/இடைத்தரகர்கள் திரு.P.ரவி, திரு.P.சுரேஷ், திரு.P.கருணாகரன், திரு.K.குப்புசாமி, திரு.K.முத்துசாமி, திரு.A.குப்புராஜ், திரு.P.செந்தில்குமார், திரு.J.சாகுல்ஹமீது செல்வி.P.மோகனபிரியா ஆகியோர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட மொத்த தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களால் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேலும் அவர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த தொகைகள் முறையற்ற முறையிலும், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதி பலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் அலுவலர்கள் இடைத்தரகர்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்துகொடுப்பதற்காக அவை முறையற்ற முறையில் அலுவலர்களால் அவர்களிடமிருந்து பிரதிபலானாக பெறப்பட்ட பணமாக இருக்ககூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும் தனியர்கள் / இடைத்தரகர்கள், முறையற்ற விதத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக அலுவலர்கள் அவர்களது அலுவல் பணியில் தனியர்கள் / இடைத்தரகர்களுக்கு பிரதிபலனாகவோ, சட்ட விரோதமான வழிகளிலோ பணி

செய்வதற்கு அவர்களைத் தூண்டுவதற்கு அலுவலகத்திற்கு கையூட்டு பணத்துடன் வந்து இருக்கக் கூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், எதிரிகள் 1) திரு.T.சண்முக ஆனந்த்-மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, 2)செல்வி.T.சக்தி-A1 இருக்கை இளநிலை உதவியாளர் ஆகிய அலுவலர்கள் மீதும், புரோக்கர்களான எதிரிகள் 3)திரு.P.ரவி, 4)திரு.P.சுரேஷ், 5)திரு.P.கருணாகரன், 6)திரு.K.குப்புசாமி, 7)திரு.K.முத்துசாமி, 8)திரு.A.குப்புராஜ், 9)திரு.P.செந்தில்குமார், 10)திரு.J.சாகுல்ஹமீது ஆகியோர்கள் மீது இன்று 12.02.2019-ம் தேதி மாலை 15.00 மணிக்கு எதிரிகள் மீது நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.02/AC/2019, u/s. 7 and 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018, r/w 102 Cr.P.C.,-இன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை கனம் நாமக்கல் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வழக்கில் புலன் விசாரணையை மேற்கொள்ள நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.மு.நல்லம்மாள் அவர்களுக்கு பணிக்கப்பட்டது.

12/2/19

(A.T. ஜெய் குமார்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.